எஸ்.டி.சி 942/2018
14.02.2020
பு.த.சா., 1 -
எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எதிரி என் வீட்டிற்கு வந்து கடன் கேட்டார். மே மாதம் 20 தேதி, 2018 ல் பணம் கொடுத்தேன். அதற்கு முன் மாதத்தில் என்னிடம் பணம் கேட்டார். எதிரி மட்டும் தான் வந்து பணம் கேட்டார். எந்த தேதியில் பணம் கேட்டார் என்று சரியாக தெரியவில்லை. மதியம் சாப்பாட்டு நேரத்திற்கு வந்தார். நேரம் சரியாக தெரியவில்லை. எதிரி அவருடைய கஷ்டத்தை சொல்லி, மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்றும், குழந்தைகளுக்கு ஸ்கூல் பிஸ் கட்டவில்லை என்றும், சொல்லி என்னிடம் பணம் கேட்டார். எதிரி 2 பசங்கள், இரண்டு பசங்களில் பீஸ் கட்டுவதற்காக பணம் கேட்டார். தற்போது எதிரி பசங்க என்ன படிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. என்னுடைய நண்பர் தாமோதரனிடமிருந்து பணம் வாங்கி கொடுத்தேன். அவர் தா.பேட்டை சேர்ந்தவர்,. அவரிடம் ஒரு லட்சம் வாங்கி கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்த போது தாமோதரன் வந்திருந்தார். நான் 2 லட்சம் வைத்திருந்தேன். தாமோதரன் கொடுத்த ஒரு லட்சத்தை சேர்த்து, எதிரியிடம் 3 லட்சம் பணம் கொடுத்தேன். தாமோதரன் இஸ்திரி கடை வைத்துள்ளார். சாட்சி மறுபடியும் அவர் டிரைவராக வேலை செய்கிறார் என்று கூறுகிறார். நான் தாமோதரனிடம் ஒரு லட்சம் ரூபாய், கைமாற்றாக வாங்கினேன். எதிரிக்கு நான் கைமாற்றாக தான் பணம் கொடுத்தேன். எனக்கு தா.பேட்டை வீட்டை தவிர வேறு சொத்தும் எதுவும் இல்லை. வீடு என் அப்பா பெயரில் உள்ளது. என் அப்பா ஆசிரியராக பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். என் அப்பா இறந்து 11 வருடமாகிறது. எதிரிக்கு கைமாற்றாக கடன் வாங்கி கடன் கொடுக்க அவசியம் என்னவென்றால் எதிரி என்னுடைய குடும்ப நண்பர் என்பதனால் கொடுத்தேன். தாமோதரனை என் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேன். எதிரிக்கு 3 லட்சம் ரூபாய் பணம் கொடுத்ததாக கூறும் போது, எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை. எதிரிக்கு கடன் கொடுத்த போது, எதிரிக்கு கடன் கொடுப்பதை பற்றி அவருடைய குடும்பத்திற்கு நான் சொல்ல வில்லை. எதிரியும் அவருடைய அண்ணன் எம்.கே ராஜாவும் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரியுனுடைய அண்ணன் தா.பேட்டை காமாட்சி அம்மன் கோவிலில் செ்கரட்டி என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் அண்ணன் ரியல் எஸ்டேட் தொழில் செய்வது எனக்கு தெரியும். எதிரியின் அண்ணன் போட்ட 100 பிளாட்டில் 60 பிளாட்டு விற்பனை செய்யாமல் உள்ளது எனக்கு தெரியாது. பிளாட் விற்பனை செய்து வந்தது எனக்கு தெரியும். எதிரிக்கு ஆராய்ச்சியில் தாய் சிட்டியில் நான்கு பிளாட் உள்ளது எனக்கு தெரியாது. கோட்டாத்தூரில் அரசன் சிட்டியில் 2 பிளாட் உள்ளது எனக்கு தெரியாது. அம்மாபட்டியில் இரண்டு பிளாட்டும், வாளிகாண்டப்பட்டியில் ஒரு பிளாட் உள்ள விபரமும் எனக்கு தெரியாது. எதிரி நல்ல வசதி வாய்ப்புடன் உள்ளார் என்றும், அவர் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், பன்னீரசெல்வத்திற்கு எதிரி கொடுத்த வெற்று காசோலையை பன்னீரசெல்வத்திடமிருந்து பெற்று, நான் பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி திருச்சி விஸ்வகர்மா சங்கத்தில் மாவட்ட துணை தலைவர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரி நல்ல நிலையில் உள்ளதனால் தான் தன்னுடைய மகனை தர்மபுரில் ஹார்டியாலேஜ்ஜில் படிக்க வைத்து வருகிறார் என்றும், அதற்கு வருடம் 2 லட்சம் ரூபாய் செலவு செய்துவருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேட்டு பாளையம் பஸ்ஸ்டாப்பு மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள இடம் என்றால் சரிதான். அங்கு வணிக வளாகம் கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த கட்டிடத்தில் 1ம்நெம்பர் கடையில் எதிரி ஹோட்டல் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். என்னிடம் பல்சர் இருச்சக்கர வாகனம் உள்ளது. அதை நான் ஸ்ரீராம் பைனான்ஸில் கடன் வாங்கியுள்ளேன். தவணை முழுவதாக கட்டி முடித்துவிட்டேன். எப்பொழுது கட்டி முடித்துவிட்டேன் என்று ஆவணத்தை பார்த்தால் தெரியும். தாமோதரன் எனக்கு கொடுத்த ஒரு லட்சம் ரூபாய் அவர் உழைப்பின் மூலம் மீது வைத்து கொடுத்தார்.

பொதுவாக கடன் கொடுக்கும் போது, அந்த தொகைக்கு கடன் பத்தரம் அல்லது உறுதிமொழி பத்திரம் எழுதிக்கொண்டு பணம் கொடுப்பது எனக்கு தெரியும். தாமோதரன் 3 லட்சம் ரூபாய் எதிரிக்கு எந்த வித ஆவணமும் இல்லாமல் ஏன் கொடுக்கிறாய் என்று கேட்கவில்லை. பணத்தை என் வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். ஒரு வருடம் வண்டி ஒட்டியதற்கான இருப்பு பணத்தை முதலாளிடமிருந்து வாங்கி கொடுத்தேன். என்னுடைய முதலாளி 8 கை அம்மன் என்ற பெயரில் டிரான்ஸ்போர்ட் வைத்திருந்தார். 2018 வருடத்தில் நான் அவரிடமிருந்து வெளியே வந்துவிட்டேன். தற்போது என்ன பெயரில் தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. 2018 டிசம்பர் மாதத்தில் வெளியே வந்தேன். எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை டிரைவராக வேலை செய்தேன் என்று ஞாபகமில்லை. 8 கை அம்மன் என்ற பெயரில் டிரான்ஸ்போர்ட்டில் எத்தனை வண்டி ஒடியது என்று எனக்கு தெரியாது. நான் போனில் அவர்களிடம் பேசுவேன். 2 ரூபாய் பணத்தை ஒநாரிடம் ஆபீஸில் வாங்கினேன். எந்த தேதியல் வாங்கினேன் என்று ஞாபகமில்லை. பணத்தை வாங்கும் போது யாரையும் என்னிடம் அழைத்து செல்லவில்லை. சம்பள பணம் மீதியை வாங்க சென்றேன். எனக்கு 1 லட்சம் ரூபாய் மேல் பணம் தரவேண்டியதாக இருந்தது. நான் 2 லட்சம் ரூபாய் கேட்டு வாங்கினேன். என்னுடைய ஒநாரிடம் 1 லட்சத்தை கைமாற்றாக வாங்கினேன். ஒரு லட்சம் ரூபாய் என்னுடைய பணம், ஒரு லட்சம் ரூபாய் கைமாற்றாக வாங்கி வந்தேன். என்னுடைய திருமணத்திற்கு பணம் தேவைப்படுகிறது என்று கேட்டு வாங்கினேன். நாளாது தேதி வரை எனக்கு திருமணம் ஆகவில்லை. முருகேசன், பரமத்தி ரோடு, நாமக்கல் என்ற முகவரி மட்டும் தான் எனக்கு தெரியும். ஆபீஸின் டோர் நெம்பர் தெரியாது. அவருடைய அலுவலகத்திற்கு அருகே நான்கு வழி சாலை பிரிவு உள்ளது. அவருக்கு அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்தால் பணம் வாங்கிய விபரத்தை கூறுவார் என்றால் சரிதான். எனக்கு எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்புக்கள் கிடையாது என்றால் சரியல்ல. என் அம்மாவிடம் வாங்கிய 2-1/2 பவுன் நகைக்காக எதிரி பன்னீர் செல்வத்திடம் கொடுத்த காசோலையை பெற்று, நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் காசோலையை கொடுக்காததால் என்னுடை வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.